கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education, Ministry of Education, Ministry of Education

கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)
**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
**Tamil language and literature I, II**

**22 T I,II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "தப்பிய கந்தை பீதாம்பரம் போல்" இங்கு '**பீதாம்பரம்**' என்பது
(1) கந்தை (2) பட்டுத்துணி (3) கிழிந்ததுணி (4) சால்வை

2) "கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்" இங்கு '**கதி**' என்பதன் பொருள்
(1) வீடுபேறு (2) நற்பேறு (3) மதி (4) நிர்க்கதி

3) "...போற்றும் இரங்கற் புகழ் மொழி இல்லை..." இங்கு '**புகழ்**' என்பதன் எதிர்ப்பதம்
(1) இரங்கல் (2) பகர் (3) இகழ் (4) போற்று

4) "நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்..." இங்கு '**பாவம்**' என்பதன் எதிர்ப்பதம்
(1) கருணை (2) பந்தம் (3) தீமை (4) புண்ணியம்

5) "எல்லாவற்றையும் விழுங்கிவிட்டு ஒரு கெப்பரோடு இருந்தது" இங்கு '**கெப்பர்**' எனும் சொல்லுக்குப் **பொருந்தாத** சொல்
(1) அடக்கம் (2) அகங்காரம் (3) ஆணவம் (4) செருக்கு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் சோடி
(1) புல் - கற்றை (2) முத்து – குவியல் (3) திறப்பு – கோர்வை (4) புகையிலை – கட்டு

7) பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக அமைவது
(1) ஓடி ஓடி (2) பச்சைப்பசேல் (3) ஆடிப்பாடி (4) பர பர

8) கொலை, களவு, கள், சூது, காமம் என்பன குறித்து நிற்பது,
(1) ஐம்புலன் (2) பஞ்சதந்திரம் (3) பஞ்சமாபாதகம் (4) ஐம்பொறி

9) 'Census' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) தொகை மதிப்பு (2) மதிப்பீடு (3) பெறுமதி (4) திறனாய்வு

10) “நளன் தேரை ஓட்டியதால் அது மின்னல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது”. இங்கு ‘மின்னல் வேகம்’ என்பது,

(1) உவமை அணி (2) உருவக அணி (3) தற்குறிப்பேற்ற அணி (4) உயர்வுநவிற்சி அணி

11) சாரியைகள் இடம்பெற்ற தொகுதி

(1) போல, அத்து (2) அத்து, அற்று (3) அற்று, கின்று (4) கின்று, அத்து

12) திசைகள் துலக்கமாய் இருக்கும். இங்கு ‘துலக்கம்’ என்பதால் உணர்த்தப்படுவது,

(1) அழகு (2) தெளிவு (3) கலக்கம் (4) பொருத்தம்

13) சஞ்சலம் எனும் பெயருடைய ஆயிரம் சங்குகளின் நடுவே இருக்கும் உயர்சாதிச் சங்கு

(1) மாராயம் (2) நிந்தகம் (3) பாஞ்சன்யம் (4) ஓலக்கம்

14) ‘இணைபிரியாமை’ என்பதை உணர்த்தும் உவமைத் தொடர்

(1) அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல (2) தாமரை இலைத் தண்ணீர் போல

(3) ஓடும் புளியம்பழமும் போல (4) நகமும் சதையும் போல

15) ‘எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு’ என்ற பழமொழிக்குப் பொருத்தமான வேறொரு பழமொழி

(1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ (2) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்

(3) அடாது செய்பவன் படாது படுவான் (4) இட்டுக்கெட்டார் எவருமில்லை.

16) மேகம், ஆபரணம், வலிமை, அழகு என்பன குறிக்கும் ஒரு சொல்.

(1) மஞ்சு (2) கார் (3) வனப்பு (4) அணிகலன்

17) முப்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா

(1) வெள்ளிவிழா (2) முத்துவிழா (3) பொன்விழா (4) வைரவிழா

18) சமுக்காளம், முலாம் என்பன எம்மொழிச்சொற்கள்?

(1) ஒல்லாந்து (2) உருது (3) மராட்டி (4) பாரசீகம்

19) பின்வருவனவற்றுள் வடக்குப் பிரதேச வழக்குச் சொல்லாக அமைவது

(1) எலை (2) சிறாம்பு (3) பசுந்து (4) எப்பன்

20) ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வழங்கும் சொல்

(1) தேவன் (2) பாணன் (3) அகதி (4) மகடூஉ

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) பின்வருவனவற்றுள் ‘சகரம்’ வேறுபட்டு ஒலிக்கும் சொல்

(1) வாசம் (2) சபை (3) பச்சை (4) சத்தம்

22) பின்வருவனவற்றுள் மாற்றுப் பெயராக அமைவது

(1) மது (2) எது (3) அது (4) சாது

23) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் விகுதிகள்

(1) அல், தல் (2) மை, சி (3) அது, மை (4) அது, உம்

24) அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) தரு, நட்பு, மீன், மேகம் (2) சங்கு, கண், வாசல், விசும்பு

(3) அன்பு, பண்பு, தங்கம், மாண்பு (4) காலை, சாலை, பாட்டு, பட்டு

25) வரையறைப் பொருள் வேற்றுமை இடம்பெற்ற தொடர்

(1) பாசத்தோடு பார்த்தார் (2) இரவோடு இரவாக சென்றான்

(3) மூன்று அப்பத்தோடு காலையுணவு முடிந்தது (4) பாலோடு தண்ணீர் கலந்தாள்

26) பின்வருவனவற்றுள் வேற்றுமைத்தொகையாக அமைவது

(1) கரும்பலகை (2) பொழிகதிர் (3) பவளவாய் (4) குளக்கரை

27) பகுபதமாக **அமையாத** சொல்

(1) கல் (2) அரசன் (3) அவன் (4) ஊரன்

28) இயல்புப் புணர்ச்சியாக அமைந்த சொல்

(1) கடற்கரை (2) கடலோரம் (3) நிலாச்சோறு (4) வட்டமேசை

- **29, 30 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உதாரணங்கள் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க**

29) (1) வன்றொடர்க் குற்றியலுகரம் - பத்து, தட்டு, கொக்கு

(2) மென்றொடர்க் குற்றியலுகரம் - பந்து, சங்கு, நஞ்சு

(3) இடைத்தொடர்க் குற்றியலுகரம் - பெய்து, மார்பு, சால்பு

(4) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - வரகு, பயறு, வரவு

30) (1) பெயர்ப் பகாப்பதம் - பூமி, நீர், தீ

(2) வினைப் பகாப்பதம் - ஓடு, நட, பாடு

(3) இடைப் பகாப்பதம் - இனி, பிற. பிணி

(4) உரிப் பகாப்பதம் - உறு, சால, தவ

- **புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) க.பொ.த. (உ/தர)ப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறுமென பரீட்சை ................................ தெரிவித்துள்ளார்.

(1) தலைவர் (2) ஆணையாளர் (3) ஆளுநர் (4) தவிசாளர்

32) ஓர் ஆக்கத்தின் குறைநிறைகளை மதிப்பீடு செய்வது .................................. ஆகும்

(1) விவரணம் (2) விமர்சனம் (3) பதிப்புரை (4) நூன்முகம்

33) கிராமங்கள் தோறும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை ....................

(1) விடுத்துள்ளனர் (2) விடுத்துள்ளன (3) விடுத்துள்ளது (4) விடுத்துள்ளாய்

34) சாரதிகள் உரிய முறையில் பயிற்சி பெற்று வாகனங்களை செலுத்தினாலன்றி, வீதி விபத்துக்களைத் ..................................

(1) தடுக்கலாம் (2) தடுக்கமுடியும் (3) தடுக்கமுடியாது (4) தடுக்க வேண்டும்

35) நூலிலுள்ள ஒவ்வொரு கவிதையும் …………………………………..
(1) இனிமையானவை (2) இனியவை (3) இனிமையானது (4) இனியன

36) மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு …………………….. வழங்கப்பட்டது.
(1) சன்மானம் (2) நிவாரணம் (3) ஊதியம் (4) வேதனம்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வாழ்க்கை ஒரு கடல் கரை காணாது
ஆழத்தில் ஒரு முத்து உறங்குகிறது
துன்பம் ஒரு காற்று — தள்ளிச் செல்லும்
ஆனால் திசையைக் காட்டி நிற்கிறது.
நம்பிக்கை ஒரு தீபம் அணையாது
இருள் வந்தாலும் ஒளி தருகிறது.
உழைப்பு ஒரு பாடல் முடிவில்லா,
அதைப்பாடும் வரை வாழ்வு
அழகாகிறது.

37) இக்கவிதை எதனைப் பற்றிக் கூறுகிறது
(1) துன்பத்தின் வலிமை (2) உழைப்பின் முக்கியத்துவம்
(3) வாழ்க்கையின் அழிவு (4) காற்றின் பயம்

38) இக்கவிதையில் இடம் பெறும் அணி
(1) உருவகம் (2) உவமை (3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வு நவிற்சி

39) ‘‘கடல் கரை காணாது’’ என்ற வரி உணர்த்துவது
(1) மிக ஆழமானது (2) மிகப் பரந்தது
(3) கரையே இல்லாதது (4) கண்ணால் பார்க்க முடியாதது

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ - ஆகவே மண்வெட்டியில் இரும்புத்தகடும் வேண்டும் மரப்பிடியும் வேண்டும்.
ஆ - மண்வெட்டியில் மண்ணை வெட்டுவது இரும்புத் தகடுதான்
இ - பயன் இல்லாதது என்று அந்த மரப்பிடியை விடக் கூடாது
ஈ - அதில் உள்ள மரப்பிடி மண்ணை வெட்டவில்லை
உ- ஆனால் மரப்பிடி இல்லாமல் மண்ணை வெட்ட முடியுமா? முடியாது.

(1) ஆ, ஈ, உ, அ, இ (2) ஆ, உ, அ, ஈ, இ (3) இ, ஆ. ஈ, அ, உ (4) இ, உ, ஆ, ஈ, அ

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**
**Tamil language and literature II**

**22 T II**

**கவனிக்குக.**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.
"தந்தைதா யாரிலரேற் றரியாளென்"

ii. பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க.
"இன்று காலை பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்தது"

iii. பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக.
'எங்கை கூட்டிக்கொண்டு போகினம்"

iv. இந்த நேரம் அம்மா எங்கே போயிருப்பா அடுக்களைக்குள்ளே தானே இருப்பா
பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டு மீண்டும் எழுதுக.

v. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, திருத்தி எழுதுக.
"நான் நாளை வருகிறேன் எனத் தம்பி கூறினான்"

vi. 'படி' எனும் சொல் தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையுமாறு தனித்தனி வாக்கியம் அமைக்குக.

vii. "பொறி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

viii. பின்வருவன எவ்வகைத் தொகைச்சொற்கள் எனக் குறிப்பிடுக.
மதிமுகம், பூங்குழல்

ix. நாவலர் உரைநடைகள் பழமையும் புதுமையும் எளிமையும் கொண்டவை
நாவலர் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் போற்றப்படுகின்றார்.
மேற்படி இரு வாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி ஒரே வாக்கியமாக எழுதுக.

x. "ஆடுகின்ற பூமரங்கள், அசைகின்ற இலைகள்" இதில் இடம்பெற்றுள்ள எச்சவினைகளை எழுதுக.

(20 புள்ளிகள்)

**2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

அ. இயற்கை வளம் நிறைந்தது எமது இலங்கை. எமது நாட்டின் வளங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது மிக அவசியமானதொன்றாகும். உள்ளூர்க் கைத்தொழிலை விருத்தி செய்து, உள்நாட்டில் அபிவிருத்தியை மேம்படுத்துவதோடு, பொருளாதாரத் தன்னிறைவையும் பெறமுடியும். எமது நாட்டு வளங்களைப் பயன்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பான **விளக்கக் கட்டுரை**.

ஆ. தற்காலத்தில் நாட்டாரியல் கலைகளைப் பேணும் மரபு அருகி வருகின்றமையை எம்மால் கண்கூடாக அவதானிக்க முடிகிறது. இந்நாட்டாரியல் கலைகள் எமது பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவற்றினைப் பேணவேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்த ஒருவருக்கும் அதனை அறியாத இன்னொருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

இ. கொரோனா காலத்தில் தொடங்கிய இணையவழிக் கற்றல் அக்காலத்தில் அவசியமாக இருந்தது. இது கல்வியைத் தொடர உதவியபோதும் அதன் எதிர்மறை விளைவுகள் மாணவர்களின் நடத்தையையும் மனநிலையையும் கல்வித் தரத்தையும் பாதித்துள்ளது. இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கி மாணவர் மன்றத்தில் நீர் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு.**

ஈ. முன்னர் தனது பாடசாலை அனுபவங்களை அம்மாவிடம் சொல்லிச் சொல்லி மகிழும் குமரன் சில நாட்களாக தாயிடம் எதுவும் பேசாததையிட்டும், சாப்பிடும் நேரங்களைத் தவிர ஏனைய நேரங்களில் தன் அறைக்குள் சென்று பூட்டிக்கொள்வதும் அவளுக்கு வியப்பை உண்டாக்கியது. சுழலும் காலச்சக்கரத்தில் தானும் கணவனும் பொருள் தேடி ஓடும் நிலையில் குமரனுடன் நேரத்தைச் செலவிடாது கால நதியில் இழுபட்டுச் சென்றால் குமரனின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறதோ என்ற தவிப்போடு குமரனின் அறைக் கதவைத் திறந்தவளுக்கு பேரதிர்ச்சி.... என்ற கருத்துப்பட ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் வ.வே.சு.ஐயரையே முன்னோடியாக, தந்தையாகக் கருதுவது பொதுமரபு. மாறாக திருமணம் செல்வக்கேசவராய முதலியார், மகாகவி பாரதியார், ஆகியோருடைய கதைகளை எடுத்துக்காட்டி அவர்களே முன்னோடிகள் எனக் கூறுவாரும் உளர். இந்நூலிலே ஏழாம் இயலில் ஐயரவர்களின் “குளத்தங்கரை அரசமரம்” என்ற கதையே சிறுகதைக்குரிய ரீதியில் அமைந்த முதல் தமிழ்ச் சிறுகதை என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் இக்கதை ரவீந்திரநாத் தாகூர் அவரின் “படித்துறையின் கதை” யின் உருவ, உள்ளடக்கச் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒன்று என்பதையும் சுட்டியுள்ளார்.

Study of kampan என்ற தலைப்பில் ஐயரவர்கள் எழுதிய நூல் அவரது திறனாய்வுச் செயற்பாட்டின் தலையாய சான்றாகும். ஐயரவர்கள் கம்பனை அனைத்துலகக் கவி வல்லவரோடு பொருத்தி, நோக்கி முன்வைத்த திறனாய்வுக் குறிப்புகளை எட்டாம் இயல் விரிவாக விளக்கிநிற்கிறது. முடிவுரை என்ற பகுதியிலே ஐயரவர்களின் இதழியல் பணி தேசபக்தன், பாலபாரதி ஆகிய இதழ்களின் ஆசிரியராக ஆற்றிய பணி பற்றிய விபரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஐயரவர்கள் பற்றிய பொது மதிப்பீடும் இதில் இடம்பெறுகிறது.
நூல் முழுவதையும் வாசித்து முடிக்கும் போது பாரதியாரும், வ.வே.சு ஐயரும் வாழ்ந்த காலகட்டத்திற்கு நாம் ஒருமுறை போய் வந்த உணர்வு ஏற்படுகின்றது. ஐயரவர்களின் ஆளுமை தொடர்பாக இதுவரை வெளிப்படாத சில கூறுகள் திரை விலகுவதை அவதானிக்கமுடிகிறது. தமிழை நவீனப்படுத்துவதில் பாரதியோடு ஏறத்தாழ சமநிலையில் நின்று சிந்தித்துச் செயற்பட்ட ஒரு வரலாற்றுப் பாத்திரம் உரிய கவனத்தைப் பெறத் தவறிவிட்டதே என்ற ஆதங்கம் ஏற்படுகின்றது.

(10 புள்ளிகள்)

## 4. பின்வரும் உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்வி கற்பதற்கு இளமைப்பருவமே சிறந்தது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனாலேயே "இளமையிற் கல்" என்று கூறுவர். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதும் இங்கு நோக்கத்தக்கது. மானுடராய்ப் பிறந்தவர் எல்லோருக்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக வேண்டப்படும் உயர்ந்த எண்ணக்கருக்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா. மாணவர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். உடலுழைப்போடு கூடிய தொழில் ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் பெரிதும் வேண்டப்படுகிறது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது என்னும் கோட்பாடு இந்நாளில் அறவே மறந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டிமயம். உணவுக்காக ஒன்றையொன்று அடித்துக்கொள்ளும் விலங்குகள் போல, பகிர்ந்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாக பறித்துப்பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்குமிடமெங்கும் காட்சி கொடுக்கிறது. எனவே துவேசமும் துயரமும் அகன்ற மனிதநேயமிக்க கல்வி முறையே இன்று வேண்டப்படுகிறது.

i. கல்வி கற்பதற்கு சிறந்த பருவமாகக் கருதப்படுவது எது?

ii. மாணவர் அனைவருக்கும் அவசியமானது எனக் குறிப்பிடப்படுவது எது?

iii. இன்று மறந்துபோய்விட்டதென ஆசிரியர் வேதனையுறும் விடயம் யாது?.

iv. பார்க்குமிடமெங்கும் காட்சி கொடுக்கும் செயற்பாடாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?

v. இன்றைய உலகிற்குத் தேவையானது என வலியுறுத்தப்படும் கல்விமுறை பற்றிக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

5. இல. 52, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் வசிக்கும் நா.சிந்துஜன் ஆகிய நீங்கள், க.பொ.த(சா/த)ப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் இக்காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெற விரும்புகிறீர்கள். இக் கற்கை நெறியை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு, நீங்கள் பயில விரும்பும் கற்கைநெறி தொடர்பான விபரம், பயில வேண்டிய காலம், கட்டண விபரம், கற்கும் வயதெல்லை என்பவற்றை அறிந்துகொள்ளும் விதத்தில் அந்நிறுவனத்தின் முகாமையாளருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

அண்மைக்காலத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை அதிகரித்து வருகின்றது. இவற்றால் மக்கள் மாத்திரமன்றி விலங்குகளும் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. ஆகையால் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையைக் குறைக்கும் விதமாகச் சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலை அதிபர், பெற்றோர், மாணவர்களை உள்ளடக்கி "பொலித்தீன் பாவனையை ஒழிப்போம்" என்ற தொனிப்பொருளில் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவால் உமது பாடசாலையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வுக் கூட்டம் பற்றி இக்குழுவின் செயலாளர் இ.புகழினி என உம்மைக் கருதி 100 சொற்களில் அறிக்கை ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2025(2026)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2025(2026)**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

தமிழ் மொழியும் இலக்கியமும் III
**Tamil language and literature III**

**22 | T | III**

**அறிவுறுத்தல்கள் :**

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**01. சுருக்கமான விடை தருக.**

i. 'கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே'

அ) 'களித்தங்குறவாடி' இதனைப் பிரித்து எழுதுக.

ஆ) கற்றோரின் இயல்பாக கூறப்படுவது யாது?

ii. 'கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்'

அ) 'கேண்மை' என்பதன் எதிர்ப்பதம் யாது?

ஆ) 'கெழீஇ' என்பதன் பொருள் யாது?.

iii. "பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்"

அ) 'அப்பீல்' என்பதன் தமிழ் வடிவம் யாது?

ஆ) இங்கு 'அவரை' என்று குறிப்பிடப்படுபவர் யார்?

iv. "புலங்களோடு கரணமும் ஆவியும்..."

அ) புலங்கள் எவை?

ஆ) கரணங்களைக் குறிப்பிடுக.

v. "பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்"

அ) புனை பூணும் என்பதன் பொருள் யாது?

ஆ) பேதை வினை செய்யின் ஏற்படும் விளைவு யாது?

vi. "படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலியை..."

அ) படரெலாம் படைத்தவள் யார்?

ஆ) 'செவிலி' என்பதன் பொருள் யாது?

vii. 'அட்சஇருதயம்' என்ற கலையைப் படித்து இருந்தான்.

அ) அட்சஇருதயக் கலை என்றால் என்ன?

ஆ) இக்கலையை கற்றவன் யார்?

viii. "தந்தை கட்டிய கூடு, புறாக் குஞ்சுகளைப் போல வளர்த்தார்"

அ) இங்கு பயின்று வரும் அணி யாது?

ஆ) இவ்வாறு வளர்த்த மன்னன் யார்?

ix. "கடவுள் கங்கை நீர்முடித்தான் இரவொழித்த நீயறிய.."

அ) இதில் 'நீர்முடித்தான்' எனக் கூறப்படுபவர் யார்?

ஆ) 'இரவொழித்தவர்' யார்?

x. "ஈமஞ்சேர் மாலை போல"

அ) ஈமஞ்சேர் மாலை என்றால் என்ன?

ஆ) இதில் எத்தகைய செயல் கூறப்பட்டுள்ளது? **(20 புள்ளிகள்)**

*02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை.

அ) இப்பாடல் உணர்த்தும் நீதிக்கருத்து யாது?

ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. "மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்"
"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்"

அ) பேதையின் செயல் எதனோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது?

ஆ) பேதையின் நட்பு ஏன் இனிமையானது?.

3. "ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்னதானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே"

அ) 'வரோதயன்' என்ற தொடரின் பொருள் யாது?

ஆ) நாட்டின் உணவுப் பஞ்சம் கவிஞரால் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

4. ஆம்.. புறப்பட வேண்டியதுதான்... (அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு... இவற்றைக் காது கொடுத்துக் கேட்கிறார்) இப்போ.. இந்த மலையைப் பிரிவது மலையைவிடக் கூடுதலாகக் கனக்கிறதே. ஆனால் என் அருமைச் செல்வங்களே.. புறப்பட வேண்டியதுதான்.. பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்குக் குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம்.. பறவைகளின் ஒலி ஓயாது.

அ) இவ்வுரைப்பகுதியில் வெளிப்படும் பிரதான உணர்வு யாது?

ஆ) அவ்வுணர்வு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?.

5. காட்சிப் படிமங்களின் மூலம் மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை எனும் மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளை ஹிட்ச்சாக் காட்டினார். "காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது" என்கிறார் ஹிட்ச்சாக். தமிழ் சினிமாவில் காட்சிப் படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளரவில்லை. இது இந்திய சினிமாவுக்கும் பொருந்தும். பேசும்

படம் பிறந்த நாளிலிருந்து, பேசும் பேச்சால் கதை சொல்லும் வழக்கம் வேரூன்றி, அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது.

(அ) காட்சிப் படிமம் மூலம் சொல்லக் கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூறக்கூடாது என்பதற்குரிய காரணம் யாது?
(ஆ) இங்கே "சரியாக வளரவில்லை" என எதனைக் குறிப்பிடுகின்றார்?. **(20 புள்ளிகள்)**

3. **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்

அ) 'சமநோக்கம்' எனும் பண்பை வலியுறுத்த ஆசிரியர் முன்வைக்கும் சான்றாதாரங்கள்

ஆ) இதிகாச பாத்திரங்கள் மூலம் 'இலட்சிய வாழ்வு' வெளிப்படும் விதம்

என்பவற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்

அ) மூட நம்பிக்கைகள்

ஆ) கிராமிய வாழ்வியல் அம்சங்கள்

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

4. "**நாவலர் எழுந்தார்**" என்ற கட்டுரையில்,

அ) நாவலர் அமர்ந்திருந்த விதமும் நோய் நிலைமையும்

ஆ) ஆசிரியர், சம்பவங்களைச் சித்திரிக்கும் திறன்

ஆகியவற்றை விபரிக்குக.

**அல்லது**

**"சீறி ஓடாத வருங்கால மனித நதி"** என்ற கவிதையில்,

அ) எழுதத் தெரியாதவனின் தோற்றம்

ஆ) எழுத்தறிவின்மையின் அவலம்

ஆகியன வெளிப்படும் விதத்தை விளக்குக. **(15 புள்ளிகள்)**

**5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக.**

5. "**அற்றைத்திங்கள்**" என்ற நாடகத்தில்

அ) நாட்டுவளம்

ஆ) தாலாட்டுப்பாடல் குறித்து நிற்கும் செய்திகள்

என்பவற்றை விளக்குக **(10 புள்ளிகள்)**

6. தமிழ்ப்பண்பாடு என்ற கட்டுரையில்

அ) தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பும் பண்டமாற்று முறையும்.

ஆ) புறநானூறு 'அமிழ்தம் இயைவதாயினும்..' என்ற பாடலில் மக்கள் நலக்கொள்கையாளர்களின் பண்புகள்

என்பவற்றைத் தெளிவுபடுத்துக **(10 புள்ளிகள்)**

7. தனிப்பாடற் பகுதியில்

அ) காளமேகப்புலவரின் பாடலில் புலவர்களின் பெருமைகள்

ஆ) படிக்காசு புலவர்பாடலில் சீதக்காதியின் கொடைத்திறம்

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**